மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்.

2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 24ஆம் நாள் வியாழன்கிழமை

1873ம் ஆண்டு 11ஆவது ஏற்பாட்டின்படி திருமதி.தீபா உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

OS.No. 397/2014 வா.சா. 1 என்பவரின் வாக்குமூலம்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | .. ஞானவேல் | வயது | .. 74 |
| த/பெ. | .. அப்பாசாமி | சாதி | .. |
| கிராமம் | .. வடமாதிமங்கலம் | சமயம் | .. |
| தாலுக்கா | .. | தொழில் | .. |

**வா.சா.1 ( குறுக்கு விசாரணை )**

1. நான் ஒய்வு பெற்ற எக்ஸிகியூடிவ் இன்ஜினியர் டி.என்.இ.பி அதிகாரி. மேற்கூறிய விவரத்தை நான் முதன்மை விசாரணையில் கூறவில்லை. 1ம் பிரதிவாதியின் மகன் இரண்டாம் பிரதிவாதியா என்றால் சரிதான். நான் என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பிரதிவாதிகள் என்நிலத்தில் ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்கிறார்கள் ஆகையால் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கின் தாவாவில் உள்ள விவரங்கள் அனைத்தும் தெரியுமா என்றால் தெரியும் நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரம் தெரியும்.

2. வழக்கு சொத்து விவரம் தெரியுமா என்றால் தெரியும். பட்டா எண் 237 அதில் 1.26 ஏக்கர் நிலம் உள்ளது. அதில் 2, 3 சப் டிவிசனாக உள்ளது. மேற்கூறிய பட்டாவில் எத்தனை சர்வே நெம்பர் உள்ளது என்றால் 42/6, 42/11எ,பி,சி, 42/13 எ,பி,சி உள்ளது. எந்தந்த சர்வே எண்ணில் எத்தனை விஸ்திரணம் தெரியுமா என்றால் 42/6, ல் 35 செண்ட், 42/11எ,பி,சி,ல் 45 செண்ட், 42/13 எ,பி,சில் 46 செண்ட் உள்ளது.

3. ஒவ்வொன்றிலும் எத்தனை விஸ்திரணம் என்றால் ஒவ்வொரு சப்டிவிசினிலும் தலா 15 செண்ட் உள்ளது. தாவா சொத்தில் ஜக்பந்தி என்ன வென்றால் நிலத்திற்கு கிழக்கு ஆறுமுக முதலியார் குமாரர்கள் யோகனந்தம், வெங்கடேசன் அவர்களின் நிலம் உள்ளது, தெற்கில்

தமோதரன் நிலம் உள்ளது, மேற்கில் சுந்தரமூர்த்தி, கிருபானந்தம் நிலம் உள்ளது, வடக்கு யோகனாந்தம், வெங்கடேசன்,. கிருபானந்தம் ஆகியவர்களின் நிலம் உள்ளது.

4. நான் தாக்கல் செய்துள்ள தாவாவில் சொத்து விவரத்தில் மேற்கூறிய ஐக்பந்தியை குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். தாவா சொத்து நான் கிரையம் பெற்ற சொத்தாகும். 1994ல் நான் கிரையம் பெற்றேன். தாவா சொத்தில் கிணறு ஏதும் கிடையாது. தாவா சொத்தானது தரிசுநிலமாக என்றால் இல்லை மானவரி நிலம். தாவா சொத்தில் பயிர் வைப்பதற்காக அனுபவத்திற்காக வருவாய் துறை ஆவணம் எதாவது தாக்கல் செய்துள்ளனே என்றால் இல்லை.

5. நான் தாவா சொத்தை கிரையம் பெற்றதிலிருந்து தாவா சொத்தில் விவசாயம் செய்யவில்லை என்று சொன்னால் தவறு நல்ல மழை காலத்தில் விவசாயம் செய்வேன். தாவாவில் தாவா சொத்து என்னுடைய உரிமையானது என்று குறிப்பிடவில்லை என்று சொன்னால் உரிமை இல்லை என்றால் நான் எப்படி தாவா சொத்தை தாக்கல் செய்துருப்பேன். பிரதிவாதிக்கும் எனக்கும் தகராறு ஏற்பட்டதா என்றால் இல்லை.

6. கிரையம் பெற்ற தாவா சொத்தை நான் அளந்துள்ளேனா என்றால் தாவா சொத்தை கிரையம் பெற்ற வருடத்திலேயே அளந்துவிட்டேன். நான் கிரையம் பெறுவதற்கு முன்னரே தாவா சொத்தின் அருகில் பிரதிவாதிகளின் நிலம் இருந்ததா என்றால் எனக்கு தெரியாது. நான் நிலத்தை அளந்த விவரம் பிரதிவாதிக்கு தெரியாது என்றால் சரிதான். இது சம்மந்தமாக நான் பஞ்சாயத்து செய்ததாக நான் தெரிவித்துள்ளேன் யாரிடம் பஞ்சாயத்து செய்துள்ளேன் என்றால் யாரிடமும் பஞூசாயத்து செய்யவில்லை. பிரதிவாதிகள் என்னை மிரட்டினார்கள் என்று குறிப்பிட்டுள்ளேன் அவர்கள் மிரட்டினார்களா என்றால் இல்லை.

7. உரிமை விளம்புகை பற்றி நான் எனது வழக்கு மூலத்தில் நான் தெரிவிக்காததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் ென்றால் சரியல்ல. தாவாவில் உள்ள சங்கதியும், நான் தாக்கல் செய்துள்ள முதன்மை விசாரணை வாக்குமூலத்தில் உ்ளள சங்கதிகளும் வெவ்வேறாக உள்ளது என்றால் எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.3ல் 2013 வருடத்திற்கான தற்போது உள்ள பட்டாவில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

8. வா.சா.3ல் பழைய ஆவணம் என்பதால் அதை ஏற்றுக்கொள்ளமுடியாது என்றால் சரிதான். மேலும் நான் தாக்கல் செய்துள்ள அடங்கலில் வா.சா.2ல் அனுபவபாத்தியம் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை பெயர் மட்டும்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

ஆகையால் தாவா சொத்து தரிசநிலமாக தான் உள்ளது என்றால் சரிதான். நான் தாவா சொத்தில் பயிர் வைக்காததால் பக்கத்தில் நிலத்துக்கராரான பிரதிவாதி எந்த தொந்தரவும் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். பிரதிவாதி அவர்கள் நிலத்தில் பயிர் வைக்கிறார்களா என்றால் தெரியாது. மேற்கூறிய விவரம் தெரியாத போது அவர் என் நிலத்தை ஆக்கிரமிப்பு செய்கிறார் என்று கூறுவது தவாறன சங்கதியாகும் என்றால் சரியல்ல.

9. என் தாவாவில் பிரதிவாதியுடன் தகராறு ஏற்பட்டுள்ளது என்று நான் குறிப்பிடவில்லை ஆகையால் பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. போலிசில் எந்தவித புகாரும் அளிக்காததால் நில தகராறு ஏற்படவில்லை என்றால் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் வேறுபட்டுள்ளதால் அதை சாட்சியமாக ஏற்ககூடாது என்றால் சரியல்ல. பிரதிவாதி வயதானவர் என்பதால் அவரை நீதிமன்றத்திற்கு அலைகழிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு தாக்கல் செய்திருப்பதால் இந்த தாவா செலவுத்தொயோடு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

10. தாவா வழக்கில் சொல்லப்பட்ட சங்கதிகள் வேறுபட்டுள்ளதால் பிரதிவாதிகள் எந்த வித பொறுப்பும் உடையவர்கள் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**( குறுக்கு விசாரணை முடிவடைந்தது )**

Taken down by me in open Court read
over to the witness and acknowledged
by him/her to be correct.

Sdl/-B.Salma
District Munsif.
Polur.